மாவட்ட உரிமையில் நீதிமன்றம், சத்தியமங்கலம்,
முன்னிலை திரு.G.கிருஷ்ணன், பி.ஏ., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்.
2018-வருடம் நவம்பர் மாதம் 29-ம் நாள் வியாழக்கிழமை
2049 திருவள்ளுவராண்டு ஸ்ரீ விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 13-ம் நாள்
அ.வ.எண்.110/2013

1.எ.தேன்மொழி
2.இளவர்.எ.பிருந்தா
3.இளவர்.எ.விஜயலட்சுமி வான்மதி
4.இளவர்.எ.இந்துமதி
(இளவர்களுக்காக அவர்களது அடுத்த சிநேகிதியும்,
தாயாருமான எ.தேன்மெழி) ...வாதிகள்

/எதிர்/

1.சின்னசாமி நாடார் (இறப்பு)
**(Amended as per order in I.A.No.25/2018 dated 06.01.2018)**
2.சி.ராஜேந்திரன்
3.சேகர்
4.ரவி
5.ராமச்சந்திரன்
6.ராஜம்மாள் என்ற செல்வி
7.முத்துச்சாமி
8.நாகராஜ்
9.துரைசாமி
10.கவிதா
11.சரிதா
12.சுலோச்சனா
13.விஜயா
**(Amended as per order in I.A.No.25/2018 dated 06.01.2018)**
14.எஸ்.ஆர்.சண்முகம்
15.சுந்தரி
**(Amended as per order in I.A.No.726/2018 dated 13.08.2018)**

...பிரதிவாதிகள்

இந்த வழக்கு கடந்த 27.11.2018-ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபொழுது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.L.வெங்கடேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி இறந்து விட்டதாலும், 2 முதல் 6 பிரதிவாதிகள், 8, 9 மற்றும் 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.V.ரத்தினசபாபதி, அவர்கள் மூலம் ஆஜராகியிருந்த போதிலும், பின்னிட்டு வழக்கு விசாரணையில் பங்கேற்றிருக்காததாலும், 7 மற்றும் 10 பிரதிவாதிகள் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு, அழைப்பாணை பெற்றுக்

கொண்டு ஆஜராகாததாலும், அவர்களுக்காக யாரும் முன்னிலையாகாததாலும் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவிற்குள்ளாக்கப்பட்டும், 14 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.K.சிவக்குமார் அவர்கள் மூலம் ஆஜராகியிருந்த போதிலும், பின்னிட்டு எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாமலும், வழக்கு விசாரணையில் பங்கேற்றிருக்காததாலும் கடந்த 02.01.2018 தேதி ஒருதலைப்பட்ச உத்தரவிற்குள்ளாக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இது நாள் வரையில் எமது ஆய்விலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்-

## தீர்ப்புரை

சத்தியமங்கலம், சார்பதிவக அலுவலகத்தில் கடந்த 19.04.2013 தேதியிட்ட ஆவண எண்.2214/2013 ஆக 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்டுள்ள ரத்து பத்திரத்தையும், மேற்படி சார்பதிவக அலுவலகத்திலேயே கடந்த 06.05.2013 தேதியிட்ட ஆவண எண்.2465/2013 ஆக 2-ம் பிரதிவாதி பெயரில், 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தினையும் இல்லா நிலையது, சட்டப்படி செல்லாது மற்றும் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்யக் கோரியும், கடந்த 16.12.2008 தேதியிட்ட அன்பழகன் என்பவரது பெயரிலுள்ள அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தினை வாதிகளிடம் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் ஒப்படைக்க உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், தாவாச் சொத்தில் வாதிகளின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யக் கூடாதென ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவு தொகை கோரியும் தாவா.

### 1. திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:-

தாவா சொத்தானது இந்நீதிமன்ற ஆளவரையறைக்குட்பட்டுள்ளது. 1-ம் வாதி, இறந்து போன அன்பழகனின் மனைவி. 2 முதல் 4 வரையிலான இளவர் வாதிகள் அவர்களின் மகள்கள். இறந்து போன 1-ம் பிரதிவாதி, 1-ம் வாதியின் மாமனார். 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள், 1-ம் வாதியின் கணவரான இறந்து போன

அன்பழகனின் சகோதரர்கள். 5-ம் பிரதிவாதி, 3-ம் பிரதிவாதியின் மகன். 2 முதல் 4 வரையிலான வாதிகள் இளவர்கள் என்பதால், அவர்களுக்காகவும் வாதி இந்த வழக்கினை தாயாகவும், அடுத்த சிநேகிதியாகவும் இருந்து தாக்கல் செய்துள்ளார். கடந்த 16.12.2008 தேதி 1-ம் பிரதிவாதி, அவருக்கு பாத்தியப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்தினை சுய விருப்பத்தின் பேரில், நல்ல மனநிலையிலும், அவரது மகனான மேற்படி இறந்து போன அன்பழகன் மீதிருந்த அன்பு மற்றும் பாசத்தின் காரணமாக சத்தியமங்கலம், சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.6461/2008 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் தாவா சொத்தினை தானமாக எழுதி வைத்து, சுவாதீன ஒப்படைப்பு செய்தார். அன்றிலிருந்தே தாவா சொத்தினை மேற்படி அன்பழகனும், தனது சுவாதீன அனுபவத்தில் எடுத்துக் கொண்டு, அமைதியான முறையில் அனுபவித்து வந்தார். அதனடிப்படையில், தாவா சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்களிலும் தனது பெயரினை மாற்றிக் கொண்டார். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தினை கடந்த 06.06.2012 தேதி சத்தியமங்கலத்தில் உள்ள ஏ.ஆர்.தங்கவேல் மகன் ரவி என்பவரிடம் ஒப்படைத்து, கைமாற்று கடனான ரூ.50,000/-த்தை பெற்றிருந்தார். கடந்த 06.10.2012 தேதி மேற்படி அன்பழகன், வாதிகளை மட்டும் வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். மேற்படி அன்பழகனின் தாயாரும், அவருக்கு முன்பே 39 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்து விட்டார். அதனால், வாதிகள் மட்டுமே இந்து வாரிசுரிமை சட்டம், 1956-ன்படி, தாவா சொத்துக்களை சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகின்றனர். கடந்த நவம்பர் மாதம், 2010 வருடம் 1-ம் வாதி ரூ.50,000/-ஐ 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடம் கொடுத்து, தனது கணவர் பெற்றிருந்த கடனை செலுத்தி விட்டு, அவர் கொடுத்திருந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை வாங்கி வரும்படி சொல்லியிருந்தார். ஆனால், தாவா சொத்தினை வாதிகளிடமிருந்து அபகரிக்க வேண்டுமென்ற தவறான எண்ணத்தில், மேற்படி கடன் தொகையை கொடுத்து விட்டு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பெற்று வந்த பிரதிவாதிகள், அதை ஒப்படைக்காமல் அவர்களே வைத்துக் கொண்டனர். மேலும், 2-ம் வாதியை தவறான எண்ணத்தில் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தூக்கி சென்று அவர்களது பொறுப்பில் வைத்து கொண்டனர். 1-ம் வாதி பலமுறை மேற்படி அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தையும், 2-ம் வாதியையும் தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டும், வேண்டுமென்றே மறுத்துவிட்டனர். அதனால், கடந்த 15.04.2013 தேதி 1-ம் வாதி,

சென்னையிலுள்ள காவல்துறை தலைவர், ஈரோடு மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சத்தியமங்கலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக பதிவு தபாலில் புகார்கள் அனுப்பி வைத்தார். அதனை காவல் அதிகாரிகள் பெற்றுக் கொண்டு, எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், மாவட்ட ஆட்சியர் மட்டும் மேற்படி புகாரின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சமூக நலத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, 2-ம் வாதியை ஒப்படைப்பது சம்மந்தமாக விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 19.05.2013 தேதி 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள், தாவா சொத்தினை உழவு செய்ய முயற்சித்தனர். அப்போது, 1-ம் வாதி கேட்டதற்கு, தாவா சொத்தினை பொறுத்து அன்பழகன் பெயரிலிருந்த 16.12.2008 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை 1-ம் பிரதிவாதி கடந்த 19.04.2013 தேதி ரத்து செய்துவிட்டு, கடந்த 06.05.2013 தேதியில் 2-ம் பிரதிவாதி பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தினை எழுதி வைத்து விட்டதாக 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் சொன்னார்கள். மேலும், தாவா சொத்திலிருந்து 1-ம் வாதியை வலுக்கட்டாயமாக வெளியேற்றி விடுவோம் என்றும் சொன்னார்கள். அவ்வாறு இருந்த போதும், 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் செயல்பாடுகளை, பக்கத்திலிருந்தவர்கள் துணையுடன் 1-ம் வாதி தடுத்து விட்டார். உடனடியாக 1-ம் வாதி, சத்தியமங்கலம் சார்பதிவகம் சென்று சரிபார்த்த போது, மேற்படி 16.12.2008 தேதியிட்ட அசல் செட்டில்மெண்ட ஆவணம் பிரதிவாதிகளிடம் இருந்ததை பயன்படுத்திக் கொண்டு, சத்தியமங்கலம் சார்பதிவக அலுவலகத்தில் ஆவண எண்.2214/2013 ஆக கடந்த 19.04.2013 தேதி தாவா சொத்து குறித்த மேற்படி அன்பழகன் பெயரிலிருந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 1-ம் பிரதிவாதி ரத்து செய்ததும், அதன் பின்னிட்டு, கடந்த 06.05.2013 தேதி ஆவண எண்.2464/2013 ஆக 2-ம் பிரதிவாதி பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததும் தெரிய வந்தது. கல்வியறிவு இல்லாத சுமார் 80 வயதுடைய 1-ம் பிரதிவாதியின் வயோதிகத்தை பயன்படுத்திக் கொண்டு, 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளால் மோசடியாகவும், தங்களது செல்வாக்கை பயன்படுத்தியும், தவறாக எடுத்துச் சொல்லியும் மேற்படி ரத்து பத்திரமும், செட்டில்மெண்ட் பத்திரமும் தவறாக உருவாக்கப்பட்டுள்ளது. 16.12.2008 தேதியிட்ட அன்பழகன் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலேயே அந்த ஆவணத்தை ரத்து செய்ய மாட்டேன் என்று 1-ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ளதால், அந்த ஆவணத்தை 1-ம் பிரதிவாதி

மட்டுமே தனிப்பட்ட முறையில் ரத்து செய்தது சட்டப்படி செல்லாதது மற்றும் இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது. மேலும், அன்பழகன் பெயரில் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக் கொடுத்த பின்னிட்டு, அதனை ரத்து செய்வதற்கான அதிகாரம் 1-ம் பிரதிவாதிக்கே இல்லை. அதுவும் மேற்படி அன்பழகன் இறந்த பின்னிட்டு, 1-ம் பிரதிவாதி தன்னிச்சையாக மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த செயல்பாடானது பிரதிவாதிகளின் கெட்ட எண்ணத்தை காட்டுகின்றது. அதே போல, மேற்படி அன்பழகன் பெயரிலிருந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து விட்டு, 2-ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லாது, வாதிகளை கட்டுப்படுத்தாது. அதனால், தாவா சொத்து குறித்து 2-ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையோ, அக்கோ, பாத்தியமோ ஏற்படாது. தற்போது வரை தாவா சொத்துக்களுக்கான பட்டா, மேற்படி அன்பழகன் பெயரில் தான் உள்ளது. மேற்படி 16.12.2008 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தின் சுவாதீனத்தில் மேற்படி அன்பழகனும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு இந்த வாதிகளும் இருந்து அனுபவித்து விவசாயம் செய்து வருகிறார்கள். மேற்படி 06.05.2013 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி, 2-ம் பிரதிவாதி செயல்படவில்லை. மேற்படி தாவா சொத்து தான் 1-ம் வாதிக்கும், மற்ற வாதிகளுக்குமுள்ள ஒரே சொத்து. 1-ம் வாதி தன்னைத் தானே பராமரித்துக் கொள்ளவும், மற்ற வாதிகளை பராமரிக்கவும் மற்றும் கல்வி செலவிற்காகவும் சிரமப்பட்டு வருகிறார். மேற்படி 06.05.2013 தேதியிட்ட 2-ம் பிரதிவாதி பெயரிலுள்ள மோசடியான செட்டில்மெண்ட் ஆவணத்தை பயன்படுத்தி, கடந்த 16.06.2013 தேதி 2-ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில், 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளும், அவர்களது ஆட்களும் தாவா சொத்தில் நுழைந்து உழவு செய்ய முயற்சித்தார்கள். அவர்களுடைய சட்ட முரணான செயல்பாடுகளை பக்கத்தினர் துணையுடன் 1-ம் வாதி தடுத்து விட்டார். தாவா சொத்தில் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும், அக்கும், பாத்தியமும் இல்லை. அவ்வாறு இருந்தும் வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யும் வகையில் நடந்து வருகிறார்கள். அதனால், 19.04.2013 தேதியிட்ட ரத்து பத்திரத்தையும், 06.05.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தையும் செல்லாது, சட்டப்படி இல்லா நிலையது, வாதிகளின் உரிமைகளை கட்டுப்படுத்தாது மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த தாவாவை தாக்கல் செய்ய

வாதிகளுக்கு அவசியம் ஏற்பட்டது. இந்த தாவா நிலுவையில் இருந்த போது, 1-ம் பிரதிவாதி இறந்து விட்டார். அதனால், இ.ம.எண்.25/2018-ல் கடந்த 06.01.2018 தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி, 6 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் இந்த வழக்கின் அவசிய தரப்பனிர்களாக சேர்க்கப்பட்டு, இந்த தாவா திருத்தப்பாடு செய்யப்பட்டது. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது, தாவா சொத்தின் ஒரு பகுதியை 14 மற்றும் 15 பிரதிவாதிகள் விலைக்கு வாங்கிவிட்டதால், அவர்களையும் இ.ம.எண்.726/2018-ல் கடந்த 13.08.2018 தேதி பிறப்பிக்கப்ப்ட்ட உத்தரவின் அடிப்படையில், இந்த தாவாவில் அவசிய தரப்பினர்களாக சேர்த்து இந்த தாவா திருத்தப்பாடு செய்யப்பட்டது.

2. <u>1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

தாவா மோசடியானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கக்கூடியதல்ல. தாவா சொத்தானது நீதிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட சிக்கரசம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்து அரசாங்கம் பட்டா கொடுத்த வகையில் 1-ம் பிரதிவாதிக்கு தனிமையில் பாத்தியப்பட்டது. தாவா சொத்தினை பொறுத்து 16.12.2008 தேதியில் 1-ம் பிரதிவாதி, அவரது இளைய மகன் அன்பழகன் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்தது உண்மை. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2008-ம் ஆண்டின் பத்திர எண்.6461/2008 ஆக பதிவு செய்ததும் உண்மை. ஆனால் அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை அன்பழகன் 1-ம் பிரதிவாதியிடமிருந்து பெறவும் சொத்தினை சுவாதீனம் பெறவும் மறுத்துவிட்டார், செட்டில்மெண்ட் பத்திரத்தில் சுவாதீனம் செய்து கொடுத்துள்ளதாக கூறப்பட்டிருந்தாலும், அன்பழகன் மறுப்பு தெரிவித்து விட்டதால் சொத்து சுவாதீனம் கொடுக்கப்படவில்லை. தானசெட்டில்மெண்ட் பத்திரமும், சொத்தின் சுவாதீனமும் 1-ம் பிரதிவாதியிடேமே இருந்தது. செட்டில்மெண்ட் நடைமுறைக்கு வராத நிலையில் அன்பழகன் 06.10.2012 தேதியில் இறந்து விட்டார். செட்டில்மெண்ட் எழுதி பதிவு செய்த போதே பட்டா மாறுதல் நமூனா தாக்கல் செய்யப்பட்டதால் அன்பழகன் பெயர் வருவாய்த் துறை ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டு விட்டது. வழக்கு சொத்தின் சுவாதீனத்தை அன்பழகனிடம் கொடுக்கவில்லை. அன்பழகன் ஒரு போதும் தாவா சொத்தில்

இருந்ததில்லை. அன்பழகன், அசல் செட்டில்மெண்ட் பத்திரத்தை சத்தியமங்கலம் எ.ஆர்.தங்கவேல் மகன் ரவி என்பவரிடம் ஒப்படைத்து கடந்த 06.06.2012 தேதியில் ரூ.50,000/- கடன் பெற்றார் என்பது உண்மையல்ல. 1-ம் பிரதிவாதியிடமிருந்து அன்பழகன் அசல் செட்டில்மெண்ட் பத்திரத்தை பெற்றுக் கொண்டதே கிடையாது. வாதிகள் இறந்து போன அன்பழகனின் சட்டப்படியான வாரிசுகள் என்பதும், அன்பழகனின் தாயார் அன்பழகன் இறப்பதற்கு முன்பே இறந்து விட்டார் என்பதும் சரி. இந்து வாரிசுரிமைச் சட்டப்படி தாவா சொத்தானது வாதிகளுக்கு பாத்தியம் ஏற்பட்டு அவர்களது சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ளது பொய். அன்பழகன் இறந்த பின்னர் நவம்பர் 2012-ல் 1-ம் வாதியானவர் 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடம் ரூ.50,000/-ஐ கொடுத்து தன் கணவன் பெற்ற கடனை அடைத்து விட்டு அசல் செட்டில்மெண்ட் பத்திரத்தை திரும்ப பெற்றுவருமாறு வேண்டுகோள் விடுத்தாகவும், ஆனால் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் உள்நோக்கத்துடன் சொத்தினை அபகரிக்க எண்ணத்துடன் 1-ம் வாதி கொடுத்த தொகையின் மூலம் கடன் தொகையை செலுத்தி விட்டு அன்பழகன் பெயரில் உள்ள அசல் செட்டில்மெண்ட் பத்திரத்தை அவர்களோ வைத்துக் கொண்டதாகவும் கூறியுள்ளது பொய். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் கெட்ட நோக்கத்துடன் 2-ம் வாதியே எடுத்துச் சென்று விட்டதாகக் கூறியுள்ளதும் பொய். அன்பழகன் இறந்தபின் அவரது தாயாரின் நடவடிக்கை சரியில்லை என்பதால் 2-ம் வாதியானவர், 3-ம் பிரதிவாதியின் வீட்டிற்கு அவரது விருப்பபடியே சென்று அவரது ஆதரவில் வாழ்ந்து வருகிறாள். தற்போது சத்தியமங்கலம், அரசு மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வருகிறாள். 2-ம் வாதியை 1-ம் வாதி அடித்து துன்புறுத்தியதாக சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1-ம் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை பெற மறுத்து, சொத்தின் சுவாதீனத்தையும் பெற மறுத்து வந்த அன்பழகன் 06.10.2012 தேதியில் இறந்து விட்ட காரணத்தால் 1-ம் பிரதிவாதியானவர் 19.04.2013 தேதியில் அவரால் 16.12.2008 தேதியன்று எழுதி பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் எண்.6461/2008-ஐ ரத்து செய்து விட்டார். அந்த செட்டில்மெண்ட் ரத்துப் பத்திரம் சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.2214/2013 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. 06.05.2013 தேதியில் தாவா சொத்தினைப் பொறுத்து 2-ம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி, சொத்தினை அவருக்கு சுவாதீனம் கொடுத்து, சொத்தின் அசல் ஆவணங்களையும்

2-ம் பிரதிவாதி வசம் ஒப்படைத்து விட்டார். 06.05.2013 தேதி முதல் தாவா சொத்து 2-ம் பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. 1-ம் வாதி பொய்யான சங்கதிகளைக் கூறி புகார் மனுக்களை கொடுத்துள்ளார். 2 முதல் 5 பிரதிவாதிகள் 19.05.2013 தேதியில் தாவா சொத்திற்கு வந்து பூமியை உழுவதற்கு முயற்சி செய்ததாகவும், 1-ம் வாதி தடுத்ததாகவும், அவர்கள் பலாத்காரமாக 1-ம் வாதியை பூமியிலிருந்து வெளியேற்றப் போவதாக கூறியதாகவும், சொல்லியுள்ளது பொய். தாவா சொத்தில் 06.05.2013 தேதி முதல் 2-ம் பிரதிவாதியே சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருகிறார். பிரதிவாதிகள் 3, 4 மற்றும் 5 ஆகியோருக்கும் தாவா சொத்தில் எந்தவிதமான பாத்தியமும், அனுபவமும் கிடையாது. தாவா சொத்துக்களைப் பொறுத்து 1-ம் பிரதிவாதியே யாருடைய தூண்டுதலும இல்லாமல் 2-ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்து, பூமையும் அவருக்கு சுவாதீனம் கொடுத்துள்ளார். அன்பழகனோ, வாதிகளோ ஒருபோதும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததில்லை. வழக்கினை தாக்கல் செய்ய வாதிகளுக்கு வழக்குமூலம் கிடையாது. கூறியுள்ள வழக்குமூலம் பொய். ஆகவே வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, பதிலுரை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. **Whether the Settlement deed dated 16.12.2008 executed by the 1st defendant in favour of her son Anbazhagan is true, valid and acted upon by the parties?**
2. **Whether the cancellation deed executed by the 1st defendant on 19.04.2013 canceling the settlement deed dated 16.12.2008 is true, valid and binding on the parties?**
3. **Whether the plaintiff is entitled for a relief of declaration that the cancellation deed dated 19.04.2013 and the settlement deed dated 06.05.2013 executed in favour of the 2nd defendant, both executed by the 1st defendant as null and void and not binding on the plaintiffs?**
4. **Whether the plaintiffs are entitled for a relief of Mandatory injunction as prayed for?**

5. Whether the plaintiffs are entitled for a relief of Permanent injunction as prayed for?
6. To what other relief the plaintiffs are entitled to?

மேற்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்ட பின்னிட்டு தான், தாவா வழக்குரை திருத்தப்பாடு செய்யப்பட்டது. அதன் பின்னிட்டு ஆஜராகியிருந்த 2 முதல் 6, 9, 11 முதல் 13 ஆகிய பிரதிவாதிகள் கூடுதல் எதிர்வழக்குரையும், 14 மற்றும் 15 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்ய முன்வரவில்லை. அதனால், கூடுதல் எழுவினா எதுவும் வனையப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

வாதிகள், அவர்களது வழக்கு கோரிக்கையை வலியுறுத்தி, 1-ம் வாதியை வா.சா.1 ஆகவும், திரு.வெங்கடேஷ் என்பவரை வா.சா.2 ஆகவும் விசாரணைக்குட்படுத்தி, வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்களை குறியிட்டிருக்கிறார்கள். வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டும், 2 முதல் 6, 8, 9 மற்றும் 11 முதல் 13 ஆகிய பிரதிவாதிகள் முன்வரவில்லை. அவர்களுக்காகவும் யாரும் முன்னிலையாகவில்லை. அதனால், அவர்களை கடந்த 26.11.2018 தேதி இந்த வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு தான் இந்த வழக்கில் வா.சா.2-ஐ வாதிகள் தரப்பில் முன்னிறுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது.

4. எழுவினாக்கள் 1 முதல் 5:-

இந்த தாவா வழக்குரையில் தரப்பினர்களுக்கிடையே சொல்லப்பட்ட உறவுமுறைகள் குறித்தும், தாவா சொத்தானது ஆதியில் இறந்த போன 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பது குறித்தும், மேற்படி 1-ம் பிரதிவாதியே, தனது மகனும், 1-ம் வாதியின் கணவருமான இறந்து போன அன்பழகனுக்கு கடந்த 16.12.2008 தேதியன்று வா.சா.ஆ.1 ஆன பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தினை எழுதி வைத்தார் என்பதும் குறித்தும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி எதிர்வழக்குரையில் மறுக்கப்படவில்லை. அவைகள் உண்மையென ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மாறாக, தாவா வழக்குரையில் சொல்லப்பட்டது போல, வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி, தாவா சொத்தின்

சுவாதீனத்தை மேற்படி அன்பழக்ன் எடுத்துக் கொண்டாரா? அவருக்கு பின்னிட்டு அவரின் சட்டப்படியான வாரிசுகளான வாதிகள் தான் தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்களா? என்பதே இரு தரப்பிற்கிடையே உள்ள மாறுபட்ட கருத்துக்களாகும்.

5. வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் தாவா சொத்தினை 1-ம் பிரதிவாதி இறந்து போன அன்பழகன் பெயரில் எழுதி வைத்த அன்றே தாவா சொத்தின் சுவாதீனத்தை மேற்படி அன்பழகன் எடுத்துக் கொண்டார். அதனடிப்படையில், தாவா சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்களிலும் மேற்படி அன்பழகன் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. மேற்படி அன்பழகன் இறக்கும் வரை அவர் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்தார். கடந்த 06.10.2012 தேதி மேற்படி அன்பழகன் வாதிகளை மட்டுமே தனது சட்டப்படியான வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். மேற்படி அன்பழகனின் தாயாரும், அவருக்கு 39 வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டார். வாதிகள் மட்டும் மேற்படி அன்பழகனின் சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில், மேற்படி அன்பழகன் இறந்ததிலிருந்து தாவா சொத்தின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள். மேற்படி அன்பழகன் உயிரோடு இருந்த போதே, வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை ரவி என்பவரிடம் கொடுத்து, பணம் ரூ.50,000/- கடனாக பெற்றிருந்தார். அவரிடமிருந்து மேற்படி அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் பெற்று வைத்துள்ளனர். மேற்படி வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலேயே, மேற்படி ஆவணத்தை 1-ம் பிரதிவாதி எந்த காலத்திலும் ரத்து செய்வதற்கான அதிகாரம் இல்லையென எழுதப்பட்டிருந்த போதும், தாவா சொத்தை வாதிகளிடமிருந்து அபகரிக்க வேண்டுமென்ற தவறான எண்ணத்தில் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளால் வா.சா.ஆ.12 ஆன 19.04.2013 தேதியிட்ட ரத்து பத்திரமும், வா.சா.ஆ.13 ஆன 06.05.2013 தேதியிட்ட 2-ம் பிரதிவாதி பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரமும் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது. அதனால், மேற்படி ரத்து பத்திரமும், தானசெட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லாது, இல்லா நிலையது மற்றும் வாதிகளை கட்டுப்படுத்தாது. அவ்வாறு சட்டப்படி செல்லாத, இல்லா நிலையதும் கொண்ட மேற்படி மோசடியான வா.சா.ஆ.12 மற்றும் 13 ஆன ஆவணங்களை பயன்படுத்திக் கொண்டு, வாதிகளின் சுவாதீனத்திற்கு

இடையூறு செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றனர். அதனால், மேற்படி வா.சா.ஆ.12 ஆன தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரமும், வா.சா.ஆ.13 ஆன 2-ம் பிரதிவாதி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லாது, இல்லாநிலையது, தாவா சொத்திலுள்ள வாதிகளின் உரிமைகளை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்ய கோரியும், 2 முதல் 5 பிரதிவாதிகள் வசம் உள்ள 16.12.2008 தேதியிட்ட அன்பழகன் பெயரிலுள்ள அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை அவர்கள் வாதிகளிடம் ஒப்படைக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும், தாவா சொத்திலுள்ள வாதிகளின் சுவாதீன அனுபவத்தை 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, பணியாளர்களோ எந்தவித இடையூறும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும், தாவா செலவு தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதிகளை ஒத்தே வாதிகள் தரப்பில் முன்னிலையான 1-ம் வாதியான வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

6. வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வா.சா.2-ம், மேற்படி வா.சா.1-ன் சாட்சியத்தை ஒத்தே தாவா வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதியை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேலும், வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்தின் சுவாதீனம் அன்பழகனிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டு விட்டதாக வாசகம் கண்டு எழுதப்பட்டிருந்த போதும், தாவா சொத்தின் சுவாதீனத்தை வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி மேற்படி அன்பழகனே சுவாதீனம் எடுத்துக் கொள்ள மறுத்து விட்டார். தாவா சொத்தின் சுவாதீனத்தில் மேற்படி அன்பழகன் எப்போதும் இருந்ததில்லை, வாதிகளும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததில்லை. தாவா சொத்தின் சுவாதீனம் மேற்படி அன்பழகனிடம் ஒப்படைக்கப்படாமல், 1-ம் பிரதிவாதியே வைத்துக் கொண்டதால் தான், அவர் எழுதி வைத்த வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட ஆவணத்தின் அசலும் அவரிடம் தான் இருந்தது. அதனடிப்படையில் தான் இறந்து போன 1-ம் பிரதிவாதியே கடந்த 19.04.2013 தேதி, 16.12.2008 தேதியிட்ட அன்பழகன் பெயரிலிருந்த தானசெட்டில்மெண்ட்டை ரத்து செய்துவிட்டு, கடந்த 06.05.2013 தேதி 2-ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து குறித்து செட்டில்மெண்ட் ஆவணம்

எழுதி வைத்து, சுவாதீனம் ஒப்படைப்பும் செய்துவிட்டார். அதனால், இந்த தாவாவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரைத்திருந்த போதும், அதை நிரூபணம் செய்ய எந்தவித சாட்சிய, சான்றாவணங்களையும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. குறைந்த பட்சம், மேற்கண்டவாறு வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியம் அளிக்கப்பட்ட போதும், அவர்கள் சாட்சியம் பொய்யென மறுத்து எந்தவித குறுக்கு விசாரணையும் செய்ய பிரதிவாதிகள் தரப்பில் முன்வரவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில், மேற்படி பிரதிவாதிகளின் செயல்பாடுகளை பார்க்கின்ற பொழுது, தாவா வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதிகளை அவர்கள் மறைமுகமாக ஒப்புக் கொண்டதாகவே தோற்றுவிக்கின்றது.

8. மேலும், இந்த வழக்கில், வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணமானது 1-ம் பிரதிவாதியால் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை அவரது சுய விருப்பத்தின் பெயரில் நல்ல மனநிலையில், 1-ம் வாதியின் கணவரான அன்பழகனுக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்பது 1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆன பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பரிசீலிக்கையில், அந்த தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்ட கடந்த 16.12.2008 தேதியே அந்த ஆவணத்தில் கண்ட தாவா சொத்தின் சுவாதீனத்தை 1-ம் பிரதிவாதியால் மேற்படி அன்பழகனிடம் கொடுத்திருக்கிறேன் என்றும் வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதும், மேற்படி ஆவணத்திலேயே, "நான் சுய நினைவுடன், மனப்பூர்வமாக இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக் கொடுத்து, அதை இன்றே அமுலுக்கு கொண்டு வந்தவிட்டபடியால், இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை எக்காரணத்தை கொண்டும் நான் ரத்து செய்வதில்லை என்றும், அதை மீறி நான் ரத்து செய்தாலும் அது சட்டப்பூர்வமாக எந்திவிதத்திலும் செல்லத்தக்கதல்ல என்றும் உறுதி கூறுகிறேன்" என்ற குறிப்பிட்ட வாசகமும் கண்டு எழுதப்பட்டுள்ளதும் புலனாகிறது.

9. மேலும், **(2016) 2 MLJ 14 : LNIND 2016 MAD 32 S.Palani Vs. S.Bharathi Dasan (deceased) and others,** என்ற வழக்கில், மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

" On date of settlement itself, title of property was transferred – Document cannot be termed as Will – Settlement Deed already came into force and even as per Settlement Deed, deceased has no power to revoke Settlement Deed unilaterally, since right or title to property already conveyed to settles – Once settlement Deed is executed by settlor to settles, if at all party, who has executed document, is aggrieved he could have very well approached Civil Court to set aside the same- He could not unilaterally cancel Settlement Deed by getting the deed of cancellation registered with Sub-Registrar-Cancellation Deed and registration without jurisdiction liable to set aside." என்றும்,

(2017) 2 MLJ-502 : LNIND 2017 MAD 211 S.Packialakshmi Vs. K.Baskaran and another என்ற வழக்கில், மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

"Property Laws- Settlement Deed – Unilateral revocation – Transfer of Property Act, Section 126-Settlor/Original owner of property executed Settlement Deed in favour of his brother's daughter/2nd Defendant-Plaintiff purchased property from 2nd Defendant-Plaintiff purchased property from 2nd Defendant-She came to know about revocation of Settlement and execution of Will by settlor in favour of his brother's son/1st Defendant- Present suit for declaration that Deed of Revocation of Settlement was invalid and void and not binding on Plaintiff -Whether deed of Revocation of Settlement Deed can be declared to be invalid – Held, in Cancellation of Deed, settlor stated that by mistake, Second Defendant was referred in settlement as his own daughter-Settlor not made any mention-about fraudulent activities on part of 2nd Defendant-Executant himself admitted execution of document which required to be attested – Such admission was best evidence against executant-Allegation of fraud and undue influence against 2nd Defendant could not be countenanced in absence of material particulars about nature of fraud or undue influence- Settlement was acted upon and transfer was complete-Transfer of possession not sine quo non for valid settlement – Settlor did not reserve power of Revocation of Settlement Deed, settlement could not be cancelled unilaterally -Settlement could be revoked only if it falls within exception under section 126 -Without bringing case under exception provided in Act, unilateral Cancellation of document was not permissible in law- Plaintiff

entitled for declaration that Deed of Revocation of Settlement was invalid and not binding on suit property and on Plaintiff – Suit decreed." என்றும்,

(2017) 4 MLJ-154 : LNIND 2017 MAD 1496 K.Bhaskaran (died) and another Vs. B.Pramila and others என்ற வழக்கில், மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

"1st Defendant was mentally stable and taken conscious decision at time when Settlement Deeds were executed- Only after 1s Plaintiff left matrimonial home and filed application for divorce, Cancellation Deeds were executed by 1st Defendant – No reason given in Cancellation Deeds for cancelling earlier documents executed – Once settlement executed is valid and not denied by the executor himself, same cannot be revoked except grounds set out under Section 126 – Unilateral cancellation not valid in law and same was not binding on Plaintiffs – No need for seeking separate declaration declaring Cancellation Deeds, settlement could not be cancelled unilaterally – In view of Settlement Deeds, Plaintiffs became absolute owners and are entitled for declaration in respect of suit properties."

என்றும் சட்டநிலைபாடுகளை எடுத்தியம்பியுள்ளது. மேலும், (2008) 1 MLJ-193 (SC), Asokan Vs. Lakshmikutty and Others என்ற வழக்கில், மேன்மைமிகு உச்சநீதிமன்றம்,

"Deeds of gift not onerous in nature – Factum of handing over of Possession of properties which were Subject matter of gift, stated in deeds of gift themselves – Averment made in deed of gift in regard to handing over of possession is sufficient proof of acceptance thereof by donee – It is not necessary to prove any over act of possession on part of appellant since express acceptance is not necessary." என்றும்,

"While determining the question as to whether delivery of possession would constitute acceptance of a gift or not, the relationship between the parties plays an important role. Even a silence may some-time indicate acceptance when the donee was aware of the recitals contained in deed of gift and it is not necessary to prove any overt act in respect thereof since an express acceptance is not necessary for completing the transaction of gift" என்றும்,

"When the deed of gift categorically state that the property had been handed over to the donee and he had accepted the same, it is sufficient proof of acceptance thereof by the donee. Even assuming that the legal presumption raised in a case of this nature is a rebuttable one, the onus should be on the donor and not on the donee" என்றும்,

"Once a gift is complete, the same cannot be rescinded. For any reason whatsoever, the subsequent conduct of a donee cannot be a ground for rescission of a valid gift"

என்றும் சட்டநிலைப்பாட்டை எடுத்தியம்பியுள்ளது. மேலும், (2008) 1 MLJ-227, N.Subramanian Vs. Thanjiammal and another என்ற வழக்கில், மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

"The delivery of possession is not necessary and Section 123 of the Transfer of Property Act, 1882 does away with the necessity of delivery of possession even it was required by the strict Hindu Law, in the case of a registered instrument of gift properly executed and attested" என்றும், "The settlement deed, when it is a duly registered document is prima facie valid in law and the onus of proof lies only on the person who is questioning the validity of the settlement deed" என்றும்,

(2012) 1 MLJ-216 K.A.Shanmugam and another Vs. Tamilarasi and others என்ற வழக்கில், மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

"Mentioning of handing over possession in settlement deed itself is sufficient to come to a conclusion that the settlement deed has been acted upon." என்றும், "Non-transfer of name of donee in revenue records immediately after settlement is not significant when the donor and donee are residing in the same property after the execution of such settlement deed." என்றும் எடுத்தியம்பியுள்ளது. மேலும்,

2014 (4) CTC-572-ல், Renikuntala Rajamma (Died) by L.Rs. Vs. K.Sarawanamma, என்ற வழக்கில், மேன்மைமிகு உச்சநீதிமன்றம்,

"Transfer of Property Act,1882 (4 of 1882), Sections 123 & 122-Gift-Requisites of Gift-When Gift becomes complete-Conditional Gift-Applicability-Donor executed registered Gift Deed retaining possession of Property for enjoyment by Donor during her life time and right to receive Rents of property-Validity of Gift-Whether retention of possession of property by Donor would invalidate Gift-Contention of Donor that Gifted property was not, delivered to possession of Donee-Held, "Transfer of Possession" of Property covered by Registered instrument of Gift duly signed by Donor and Attesting Witness is not sine qua non for making of valid Gift-Delivery of possession of Gifted property is not essential condition for completion of valid Gift-Provision does not make delivery of possession of immovable property gifted as an additional requirement for Gift to be valid- Mere retention of right to use property during lifetime of Donor does not in any way affect transfer of ownership in favour of Donee-Law laid down by Supreme Court in K.Balakrishnan v. K.Kamalam, 2004(1) CTC 146 (SC), was approved and followed."

என்றும் சட்டநிலைபாட்டை எடுத்தியம்பியுள்ளது.

10. மேற்கண்ட சட்டநிலைப்பாடுகளின் அடிப்படையிலும், வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டு எழுதப்பட்ட மேற்படி வாசகங்களின் அடிப்படையில் பார்த்தோமேயானால், மேற்படி வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட்டை ரத்து செய்வதற்கான அதிகாரமே இறந்து போன 1-ம் பிரதிவாதிக்கு இல்லை. அவ்வாறு அவர் ரத்து பத்திரத்தை பதிவு செய்ய முன்வந்திருந்த போதும், அந்த ரத்து பத்திரத்தை பதிவு செய்வதற்கான ஆள்வரையறையும் மேற்கண்ட ஆவணத்தை பதிவு செய்த பதிவாளர் அலுவலகத்திற்கு இல்லை. அவ்வாறு இருந்த போதும், 1-ம் பிரதிவாதியால் மேற்கண்ட அன்பழகன் பெயரில் எழுதி வைக்கப்பட்ட வா.சா.ஆ.1 ஆன 16.12.2008 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட்டை வா.சா.ஆ.12 ஆன 19.04.2013 தேதியிட்ட ரத்து பத்திரத்தின் மூலம் ரத்து செய்தது சட்டப்படி செல்லாதது ஆகும்.

11. மேலும், இந்த வழக்கில் மேற்படி வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில், தாவா சொத்தின் சுவாதீனத்தை மேற்படி அன்பழகன் எடுத்துக் கொண்டார் என்பதை காட்ட வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆன தாவா சொத்திற்கான சிட்டாவின் சான்று நகலும், அ பதிவேட்டின் சான்று நகலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் பெயரளவிற்கு ஏற்படுத்தப்பட்டதென 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரைத்திருந்த போதும், அதை அவர்கள் தரப்பில் நிரூபணம் செய்ய முன்வரவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில், வாதிகள் தரப்பில் தாவா சொத்தினை வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திய அன்றே, மேற்படி அன்பழகனும், அவரது இறப்பிற்கு பின்னர் அவரின் சட்டப்படியான வாரிசுகளும் சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டு, சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்ற சங்கதிகளானது வாதிகளால் வா.சா.1 மற்றும் 2-ன் சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

12. தாவா சொத்திலுள்ள வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு இந்த 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் பல்வேறு இடையூறுகளை செய்து வந்தார்கள் என்பது வா.சா.ஆ.5 முதல் 11 வரையிலான சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையில் தெரிய வருகிறது. மேலும், வா.சா.ஆ 1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணமானது 1-ம் பிரதிவாதியால் அவரது சுய விருப்பத்தின் பேரில் நல்ல மனநிலையில் கடந்த 16.12.2008 தேதி மேற்படி அன்பழகன் பெயரில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு ஆவணமாக எழுதி வைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணமானது மேற்படி அன்பழகன் உயிரோடு இருக்கும் வரை ரத்து செய்யப்படவில்லை. மேற்படி அன்பழகன், கடந்த 06.10.2012 தேதி இறந்த பின்னிட்டு, கடந்த 19.04.2013 தேதி தான் வா.சா.ஆ.12 ஆன சான்றாவணத்தின் மூலம் மேற்படி வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு காலம் கடந்து ரத்து செய்யப்பட்டதற்கு, மேற்படி வா.சா.ஆ.12 ஆவணத்தில் சொல்லப்பட்ட காரணங்களானது அதை நிரூபணம் செய்யப்பட வேண்டிய கடப்பாடுடைய பிரதிவாதிகளால் அதை நிரூபணம் செய்யப்படவில்லை. தாவா சொத்து குறித்து வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்த 1-ம் பிரதிவாதிக்கே அதை ரத்து செய்வதற்கான சட்டப்படியான உரிமை தன்னிச்சையாக இல்லை. அவ்வாறு இருந்த போதும்,

அவரால் வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை, வா.சா.ஆ.12 ஆவணத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டதும், அதன் பின்னிட்டு அவராலேயே அவருக்கு எந்தவித உரிமை பாத்தியம் இல்லாமல், 2-ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.13 ஆன செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லாததது ஆகும். அவ்வாறு தாவா சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட செல்லாத ஆவணங்கள் இந்த வாதிகளின் தாவா சொத்திலுள்ள உரிமைகளை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது. மேலும், வா.சா.ஆ.1 ஆன தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலானது 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் வசம் உள்ளது என்பதும் அவர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மூலம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

13. எனவே, 1-ம் பிரதிவாதியால் அவரது மகன் அன்பழகன் பெயரில் எழுதி வைக்கப்பட்ட கடந்த 16.12.2008 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணமானது உண்மையானது, செல்லத்தக்கது மற்றும் அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி அதில் கண்ட நபர்கள் செயல்பட்டுள்ளார்கள் என்றும், 19.04.2013 தேதியிட்ட ரத்து பத்திரத்தின் மூலம் 16.02.2008 தேதியிட்ட தானசெட்டில்மெண்டை 1-ம் பிரதிவாதி ரத்து செய்தது உண்மையானதல்ல, சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அந்த ஆவணம், அதில் சொல்லப்பட்ட நபர்களை கட்டுப்படுத்தாது என்றும், 1-ம் பிரதிவாதியால் 19.04.2013 தேதியிட்ட ரத்து பத்திரமும், 06.05.2013 தேதியிட்ட 2-ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லாது, இல்லாநிலையது, வாதிகளை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரத்தை வாதிகள் பெறத்தக்கவர்கள் என்றும், வா.சா.ஆ.1 ஆன கடந்த 16.12.2008 தேதியிட்ட இறந்து போன அன்பழகன் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளிடமிருந்து வாதிகள் பெறத்தக்க வகையில், 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் வாதிகள் பெறத்தக்கவர் என்றும், தாவா சொத்திலுள்ள வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, பணியாளர்களோ யாரும் எந்தவித இடையூறும் செய்யக் கூடாதென்ற ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் வாதிகள் பெறத்தக்கவர்கள் என்றும் மேற்கண்ட எழுவினாக்கள் ஐந்திற்கும் ஒன்று சேர இந்நீதிமன்றத்தால் முடிவு கண்டு விடையளிக்கப்படுகின்றது.

14. எழுவினா-6:-

இந்த தாவாவினை தாக்கல் செய்ய 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் காரணமாக இருந்துள்ளார்கள். தற்போது 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டார். இந்நிலையில், 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள், வாதிகளுக்கு தாவா செலவுத் தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள். எனவே, இதர பரிகாரங்களாக தாவா செலவு தொகையை வாதிகள், 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளிடமிருந்து பெறத்தக்கவர்கள் என இவ்வெழு வினாவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு கண்டு, விடையளிக்கப்படுகின்றது.

முடிவில்,

தாவாவில் வாதிகள் கோரியபடி சத்தியமங்கலம், சார்பதிவக அலுவலகத்தில் கடந்த 19.04.2013 தேதியிட்ட ஆவண எண்.2214/2013 ஆக 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்டுள்ள ரத்து பத்திரத்தையும், மேற்படி சார்பதிவக அலுவலத்திலேயே கடந்த 06.05.2013 தேதியிட்ட ஆவண எண்.2465/2013 ஆக 2-ம் பிரதிவாதி பெயரில், 1-ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தினையும் இல்லா நிலையது, சட்டப்படி செல்லாது மற்றும் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்தும், கடந்த 16.12.2008 தேதியிட்ட அன்பழகன் என்பவரது பெயரிலுள்ள அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தினை வாதிகளிடம் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் இத்தீர்ப்பாணை தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் ஒப்படைக்குமாறு செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும், தாவாச் சொத்தில் வாதிகளின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யக் கூடாதென ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், வழக்கு செலவு தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2018-ம் வருடம் நவம்பர் மாதம் 29-ம் நாள் வியாழக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

**(S/d.)G.Krishnan**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சத்தியமங்கலம்.

வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-

| | | |
|---|---|---|
| வா.சா.1 | திருமதி.தேன்மொழி | (1-ம் வாதி) |
| வா.சா.2 | திரு.வெங்கடேஷ் | |

பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:- - இல்லை -

வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 16.12.2008 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | …சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 07.05.2013 | புல எண்.156/3-க்கான சிட்டா | …சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | 07.05.2013 | புல எண்.156/3-க்கான "அ" பதிவேடு | …சான்று நகல் |
| வா.சா.ஆ.4 | 07.01.2013 | அன்பழகனின் இறப்பு சான்றிதழ் | …சான்று நகல் |
| வா.சா.ஆ.5 | 15.04.2013 | முதலமைச்சருக்கு அனுப்பிய புகார் மனு | … நகல் |
| வா.சா.ஆ.6 | 19.04.2013 | காவல் துறை தலைவர் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை | …அசல் |
| வா.சா.ஆ.7 | 17.04.2013 | மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை | …அசல் |
| வா.சா.ஆ.8 | 17.04.2013 | காவல் கண்காணிப்பாளர் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை | …அசல் |
| வா.சா.ஆ.9 | 18.04.2013 | சத்தியமங்கலம் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை | …அசல் |
| வா.சா.ஆ.10 | 17.04.2013 | காவல் ஆய்வாளர் பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை | …அசல் |
| வா.சா.ஆ.11 | 13.05.2013 | குறிப்பாணை | …நகல் |
| வா.சா.ஆ.12 | 19.04.2013 | தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் | …சான்று நகல் |
| வா.சா.ஆ.13 | 06.05.2013 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | …சான்று நகல் |

பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் - இல்லை -

(S/d.)G.Krishnan
மா. உ.நீ.,
சத்தி.